மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தகுதியில்லாத காரணத்தால் அல்ல, போலி சர்டிபிகேட்டுகளைக் கொடுத்ததின் காரணமாக அவர்கள் பணிநீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள்.

திரு. இல. பலராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலிலே இரண்டு சங்கங்களை ஏற்படுத்தி இருக்கிறார்கள் என்று கூறினார்கள். மொத்தம் இருக்கக்கூடிய காவலர்களின் எண்ணிக்கை எவ்வளவு ; அதில் 2 சங்கங்களில் பதிவு செய்து கொண்டவர்கள் யார்? அரசியல் உள்நோக்கோடு சுங்கங்களை அமைத்திருக்கிறார் களா? வேலூர் சிறையில் சங்கத்தை ஏற்படுத்துவதற்கு சூழ் நிலை உருவாகியபோது அந்தக் காவலர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வேலை நீக்கப்பட்டு இருக்கிறார்கள் என்பது உண் மையா? அதுகுறித்து என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக் கிறது?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : இரண்டு சங்கத்தைச் சேர்ந்த தலைவர்களும் கிட்டத்தட்ட எல்லா அரசியல் கட்சித் தலைவர்களையும் பிடித்துக்கொண்டு எங்களை ஆதரிக்க வேண் டும், ஆதரிக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். அரசியல் உள்நோக்கம் இருக்கிறதா என்பதை மாண்புமிகு உறுப்பினர் தான் சொல்ல வேண்டும். தற்போது பிரச்சினையில் உள்ள சங்கத்திற்கு முன்பே ஒரு சங்கம் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. திரு. கிருஷ்ணன் தலைமையில் ஒரு சங்கமும், திரு. இஸ்மாயில் தலைமையில் ஒரு சங்கமும் அமைக்கப்பட்டு அங்கீகரிக்க வேண்டு மென்று கோரிக்கை விடுத்து இருக்கிறார்கள். இரண்டு சங்கங் களும் பல்வேறு அரசியல் கட்சிகளை அணுகி அவர்கள் மூலமாக சங்கத்தை அங்கீகரிக்க வேண்டுமென்று வற்புறுத்தி வருகின்றன.

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

திண்டுக்கல்லில் மாவட்ட நீதி மன்றத்தின் பிரிவு ஒன்றை நிறுவுதல்

வினா எண். 839—திரு. வேடந்தூர் வி.பி. பாலசுப்பிரமணியம் திரு. என். எஸ். வி. சித்தன் மாண்புமிகு கூட்டுறவு-சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திண்டுக்கல்லில் மாவட்ட நீதி மன்றத்தின் பிரிவு ஒன்றை நிறுவ அரசு முடிவு செய்துள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : ஆம்.

1981 ஏப்ரல் 22]

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவர் அவர்களே. அமைச்சர் அவர்கள் பதிலிலே உண்டு என்று தெரிவித்ததற்காக நன்றி. திண்டுக்கல் பகுதி இன்னொரு மாவட்டமாகவே ஆரம்பிக்கக்கூடிய தகுதிபெற்றது. மதுரை வடக்கு மேற்கு தாலுகாக்களைச் சேர்த்து, திண்டுக்கல் பகுதியிலே உள்ள மக்களின் வசதிகளைக் கருதி துரிதமாக அதைப் பரிசீலனை செய்து எப்போது அமல்படுத்தப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : அதன் அவசியத்தை அரசு உணர்ந்த காரணத்தால் தான் மதுரை, மேலூர், திருமங்கலம், உசிலம்பட்டி, நிலக்கோட்டை ஆகிய பகுதிகளை சேர்த்து ஒரு பிரிவும், பெரியகுளம், பழனி, உத்தமபாளையம் கொடைக்கானல், வேடசந்தூர் ஆகிய பகுதிகளை சேர்த்து இன்னொரு பிரிவும் வருகிற பார்ட் 2 ஸ்கீமிலே சேர்க்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

கழகக் குரல் பத்திரிகை 1975-வது ஆண்டு வெளியிட்ட
அண்ணா பிறந்த நாள் விழா மலர்.

வினா எண். 840—திரு. ஏ. சி. சண்முகம் : மாண்புமிகு கூட்டுறவு-சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) 'கழகக் குரல்' என்ற தமிழ்ப்பத்திரிகை 1975 ஆம் ஆண்டு அண்ணா பிறந்த நாள் விழா மலர் வெளியிட நிலவள வங்கியில் இருந்து விளம்பரப் பணம் எவ்வளவு கொடுக்கப்பட்டது ?

(ஆ) மலர் வெளியிடப்பட்டதா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) ரூ. 2,000

(ஆ) ஆம்.

திரு. ஏ. சி. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற கூட்டுறவு இயக்கங்களைப் பயன்படுத்தி திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சி கட்சிப் பிரச்சாரத்திற்காக பயன்படுத்தியிருக்கிறார்கள். முந்தைய ஆட்சிக் காலத்திலே அரசு இயந்திரங்களை பயன்படுத்தி கையாடல் செய்திருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : குற்றச்சாட்டு சொல்லக் கூடாது. விளம்பரம் வாங்குவது கையாடலில் வராது.

TRUTH ALONE TRIUMPHS